**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 144/பேரூ/2024
நாள்:20.09.2024

திருமதி. பா.மாரிலெட்சுமி,
சோழவந்தான்,
மதுரை மாவட்டம். . . . முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம். . . . எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், சோழவந்தான், வாடிப்பட்டி ரோடு, நேதாஜி நகர், 1–வது தெரு, 3வது வார்டு, கதவு எண். 3–1–63A, என்ற முகவரியை சேர்ந்த திருமதி. பா.மாரிலெட்சுமி, என்பவரது 19.08.2024 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 21.08.2024 அன்று பெறப்பட்டு 144/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை:

மதுரை மாவட்டம், சோழவந்தான் என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் திருமதி. பா.மாரிலெட்சுமி, என்பவர் தனது 19.08.2024 நாளிட்ட மனுவில் தான் சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சியில் கடந்த 17 ஆண்டுகளாக நிரந்தர தூய்மைப் பணியாளராக பணியாற்றி வருவதாகவும்; இப்பேரூராட்சியில் பணிபுரிந்த தூய்மைப்பணி மேற்பார்வையாளர் வயது முதிர்வின் காரணமாக 31.03.2024 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அப்பணியிடம் 01.04.2024 அன்று முதல் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது என தெரிவித்து, அப்பணியிடத்திற்கான முன்னுரிமைப்பட்டியலில் முதலிடத்தில் உள்ள தன்னை தூய்மைப்பணி மேற்பார்வையாளர் பதவி உயர்வு அளிக்காமல் பேரூராட்சியில் காலம் தாழ்த்துவதாக புகாராக தெரிவித்து, அப்பணிக்கு தன்னை பதவி உயர்வு அளித்து நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

2) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (2)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் மற்றும் பிரிவு 2 (3)ன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையீட்டிற்கும் மட்டுமே இம்முறைமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3) ஆனால் மனுதாரரின் மனுவில் மனுதாரரை சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சியில் காலியாகவுள்ள தூய்மைப்பணி மேற்பார்வையாளர் பணிக்கு, பதவி உயர்வு அளித்து பணியிடத்தை நிரப்பக் கோருவது சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சி பணியமைப்பு தொடர்பான பொருண்மை என்பதால் இது குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரை அணுகி உரிய நிவாரணம் தேடிக்கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4) 2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் 20 ..ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. பா.மாரிலெட்சுமி,
கதவு எண்.3–1–63A, 3வது வார்டு, 1–வது தெரு,
நேதாஜி நகர், வாடிப்பட்டிரோடு, சோழவந்தான்,
மதுரை மாவட்டம் – 625 214

2) செயல் அலுவலர்,
சோழவந்தான் தேர்வுநிலை பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர்,
(Nodal Officer) (பெயரிடப்பட்ட உரையில்),
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028

நகல் :

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/9/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (முகூபொ).